



# கிருபையால் உண்டான வியப்பு

பாடம் 2 அக்டோபர் 11, 2025








“விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடே கூடச் சேதமாகாதிருந்தாள்.”
(எபிரேயர் 11:31)

கானானியர்கள் கிருபையின் எல்லைகளை மீறிவிட்டார்கள். அதனால்தான், இஸ்ரவேலருக்கு கட்டளை: உள்ளே போய், அவர்கள் அனைவரையும் கொன்று, அவர்களின் உடைமைகளை கைப்பற்றுங்கள்.


இருப்பினும், அந்த கிருபையின் எல்லைகளை தாண்டாத மக்கள் கானானில் இன்னும் இருந்தனர். தேவன் தங்களுக்கு வழங்க விரும்பிய கிருபையை ஏற்றுக்கொள்ள தயாராக இருந்த அனைவரும் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டனர்.






- **இஸ்ரவேல் ஜனங்களுக்கான தேவகிருபை (யோசு 2:1, 22-24):**
  - இரண்டாம் வாய்ப்பு
- **இராகாபிற்கான தேவகிருபை (யோசு 2:2-21):**
  - கடுகு விதையளவு விசுவாசம்
  - இராகாபிற்கு நீட்டிக்கப்பட்ட உடன்படிக்கை
- **கிபியோனியர்களுக்கான தேவகிருபை(யோசுவா 9):**
  - ஏமாற்றிய தூதுவர்கள்
  - ஆசீர்வாதமும் சாபமும்

# இஸ்ரவேல் ஜனங்களுக்கான தேவகிருபை (யோசுவா 2:1, 23-24)



# இரண்டாம் வாய்ப்பு

"நூனின் குமாரனாகிய யோசுவா சித்தீமிலிருந்து வேவுகாரராகிய இரண்டு மனுஷரை இரகசியமாய்வேவுபார்க்கும்படி அனுப்பி: நீங்கள் போய் தேசத்தையும் எரிகோவையும் பார்த்துவாருங்கள் என்றான்." (யோசுவா 2:1மு)



மோசே கானானை ஆய்வு செய்ய உளவாளிகளை அனுப்பிய போது, மக்கள் உள்ளே நுழைய மறுத்துவிட்டனர். 40 ஆண்டுகளுக்கு பிறகு, புதிய உளவாளிகள் அனுப்பப்பட்டனர், இதனால் வெவ்வேறு விளைவுகள் ஏற்பட்டன.


| உளவாளிகள் சென்றனர் | |
|---|---|
| பொது வெளியில் (12 உளவாளிகள்) | இரகசியமாக (2 உளவாளிகள்) |

| உளவாளிகளின் செயல்திறன் | |
|---|---|
| 40 நாட்கள் ஆய்வு | 3 நாட்கள் ஒளித்துக் கொண்டனர் |


| உளவாளிகளின் ஆய்வறிக்கை | |
|---|---|
| அவர்கள் ஜனங்களை மனமடிவாக்கினர் | அவர்கள் யோசுவாவை ஊக்கப்படுத்தினர் |

பிலேயாமின் சோதனையின் முன் புதிய தலைமுறை பரிதாபமாக தோல்யடைந்நதிருந்தாலும், தேவன் அவர்களுக்கு இரண்டாவது வாய்ப்பை கொடுத்தார் (எண்ணா. 25:1-3, 31:16; யோசு. 2:1).

இந்த முறை திராட்சைக் குலைகளோ, நிலத்தின் பழங்களோ இல்லை, விசுவாசக் கதை மாத்திரமே (இராகாபை போல), வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை சொந்தமாக்கி கொள்ள ஊக்குவித்தது.




# இராகாபிற்கான தேவகிருபை (யோசுவா 2:2-21)



# கடுகு விதையளவு விசுவாசம்

"விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்." (எபிரேயர் 11:31)



**இராகாபின் விசுவாசம் எதன் அடிப்படையில் இருந்தது (யோசு. 2:9-11)?**

இராகாப், செங்கடலை கடந்தது போன்ற அனைவரும் அறிந்த நிகழ்வுகளை பற்றி பேசுவதை கவனியுங்கள். ஆனால் மற்றவர்கள் எபிரேயர்களின் தேவனுக்கு பயந்தாலும், அவள் அவருடைய இறகுகளின் கீழ் தஞ்சம் புகுந்தாள் (யோசு. 2:12-13).

ஏன், அவள் தேவனை நம்பியிருந்தால், உளவாளிகளுக்கு உதவ அவள் பொய்யை பயன்படுத்தினாள்?

அவளுடைய இளம் விசுவாசம் தேவனுடைய சித்தத்தை முழுமையாக புரிந்துகொள்வதை குறிக்கவில்லை. உளவாளிகளுக்கு உதவவும், தன் உயிரையும் தன் குடும்பத்தினரின் உயிரையும் காப்பாற்றவும் அவள் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தாள். அறிவு பின்னர் வரும்.

அவள் எடுத்த முடிவிற்காகவும், தேவனுடைய செயல்பாட்டு முறையைப் பற்றிய புரிதலுக்காகவும், தன் வார்த்தைகளுக்கு உறுதியான செயல்களால் ஆதரவளித்தத்தற்காகவும் வேதம் அவளை பாராட்டுகிறது;(யாக்கோபு 2:25).

தேவனிடம் சரணடைந்த எந்த எரிகோ குடியிருப்பாளருக்கும் என்ன நடந்திருக்கும் என்பதற்கு இராகாப் ஒரு உதாரணம்.

# இராகாபிற்கு நீட்டிக்கப்பட்ட உடன்படிக்கை

"எவனாகிலும் உன் வீட்டு வாசல்களிலிருந்து வெளியே புறப்பட்டால், அவனுடைய இரத்தப்பழிஅவன் தலையின்மேல் இருக்கும். எங்கள்மேல் குற்றம் இல்லை; உன்னோடே வீட்டில் இருக்கிறஎவன்மேலாகிலும் கைபோடப்பட்டதேயாகில், அவனுடைய இரத்தப்பழி எங்கள் தலையின் மேல் இருக்கும்." (யோசுவா 2:19)

**இராகாபின் தாக்கம் மறுக்கமுடியாதது:** நான் உங்களிடம் தயவாக (ஹேஸட்) நடந்துகொண்டு உங்களை காப்பாற்றினேன்; இப்போது நீங்கள் தயவாக என்னையும் என் உறவினர்களையும் காப்பாற்றுங்கள். (யோசுவா. 2:12-13).



இராகாப் அதை அறிந்திருக்கவில்லை என்றாலும், தேவன் தாமே இஸ்ரவேலிடம் தயவுடன் நடந்து கொண்டது போல, அதாவது, தன்னுடன் தயவுடன் நடந்து கொள்ளும்படி இஸ்ரவேலிடம் கேட்டுக் கொண்டாள் [*ஹேஸட்*] (உபா. 7:12). எகிப்தில் மரணத்திலிருந்து தப்பிக்க அவர்கள் நிறைவேற்றிய அதே நிபந்தனைகளை நிறைவேற்றுமாறு வேவுகாரர்கள் இராகாபிடம் கேட்டார்கள். இந்த வழியில், இஸ்ரவேலுடனான தேவனுடைய உடன்படிக்கையில் அவளும் சேர்த்துக் கொள்ளப்பட்டாள்.



**பஸ்காவில் இஸ்ரவேலர்**


- அவர்கள் தங்கள் நிலைக்கால்களின் மேற்சட்டத்தை இரத்தத்தால் அபிஷேகம் செய்ய வேண்டியிருந்தது (யாத். 12:7)
- அவர்கள் வீட்டை விட்டு வெளியேறினால் இறந்துவிடுவார்கள் (யாத். 12:13)

**எரிகோவில் இராகாப்**

- அவள் ஜன்னலில் சிவப்பு கயிற்றை கட்டி வைக்க வேண்டியிருந்தது (யோசு. 2:18)
- அவள் வீட்டை வெளியேறினால், அவள் இறந்துவிடுவாள் (யோசு. 2:19)




# கிபியோனியர்களுக்கான தேவகிருபை
## (யோசுவா 9)



# ஏமாற்றிய தூதுவர்கள்

"அவர்கள் கில்காலில் இருக்கிற பாளயத்துக்கு யோசுவாவினிடத்தில் போய், அவனையும் இஸ்ரவேல் மனுஷரையும் நோக்கி: நாங்கள் தூரதேசத்திலிருந்து வந்தவர்கள், எங்களோடே உடன்படிக்கைபண்ணுங்கள் என்றார்கள்." (யோசுவா 9:6)

இராகாபுக்கும் கிபியோனியர்களுக்கும் இடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் கவனியுங்கள்:




| விசுவாச மூலக்கூறுகள் | இராகாப் | கிபியோனியர்கள் |
|---|---|---|
| அடிப்படை | கேட்டல் (2:10) | கேட்டல் (9:3) |
| அர்த்தம் | பொய் (2:4-5) | பொய் (9:4) |
| இலக்கு | இரட்சிக்கப்படுதல் (2:13) | இரட்சிக்கப்படுதல் (9:24) |
| உடனடி விளைவு | மீட்பு (6:23) | மீட்பு (9:26) |
| நீண்ட கால விளைவு | முழு குடியுரிமை (6:25) | பணிவிடை (9:27) |

உளவாளிகளை விடுவிப்பதற்காக இராகாப் தன்னிச்சையாக பொய் சொன்னாள். இருப்பினும், கிபியோனியர்கள் ஏமாற்றும் நோக்கத்துடன், தந்திரமாக, வேண்டுமென்றே பொய் சொன்னார்கள், (பார்க்க ஆதி 3:1மு). மேலும், இஸ்ரவேலின் தலைவர்கள் தேவனிடம் ஆலோசனை கேட்காமல் தோல்வியடைந்தனர் (யோசு. 9:14).

இது அவர்களை ஒரு சிக்கலில் ஆழ்த்தியது: கிபியோனியர்களை அழிக்கவும், அல்லது அவர்களோடு உடன்படிக்கை பண்ணவும் (யோசு. 9:18).







# ஆசீர்வாதமும் சாபமும்

“இப்போதும் நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; என் தேவனுடைய ஆலயத்துக்கு விறகுவெட்டுகிறவர்களும், தண்ணீர் எடுக்கிறவர்களுமான பணிவிடைக்காரராயிருப்பீர்கள்; இந்த ஊழியம் உங்களைவிட்டு நீங்கமாட்டாது என்றான்.” (யோசுவா 9:23)

கிபியோனியர்களின் உயிரை காப்பாற்றுவது தேவனுடைய நேரடி கட்டளையை மீறுவதாக இருக்கும் (உபா. 7:1-2). அவர்களுக்கு உடன்படிக்கை செய்ததை போல உடன்படிக்கையை மீறுவதும் பாவமாக கருதப்பட்டது (யோசு. 9:19; சங். 15:4பி). இந்த பிரச்சனை எப்படி தீர்க்கப்பட்டது? அவர்களின் உயிர் காப்பாற்றப்பட்டது, ஆனால் அவர்கள் ஒரு சாபத்தின் கீழ் வைக்கப்பட்டனர் (யோசு. 9:20-23). தலைமுறை தலைமுறையாக ஊழியர்களாக இருப்பது தான் சாபம். இது அவர்களை தேவனுடைய மக்களுடன் நெருங்கிய உறவில் வைத்தது, அவர்களிடமிருந்து அவர்கள் ஒரு போதும் பிரிக்கப்படவில்லை (நெகே. 7:6, 25). மேலும், தேவனுடைய வீட்டிற்கு தண்ணீர் எடுத்து செல்பவர்களாவும், விறகு வெட்டுபவர்களாகவும் இருப்பது அவர்களை தேவனுடன் தொடர்பில் வைத்திருக்கிறது. தேவனுடைய கிருபையால், சாபம் ஆசீர்வாதமாக மாறியது. “நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன்” (எசே. 33:11).





தேவன் அவர்களுக்கு நியமித்த எல்லா பிரதேசங்களையும் இஸ்ரவேல் புத்திரர் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அந்த நாடுகள் உண்மையான தேவனையும் அவருடைய வழிபாட்டையும் நிராகரித்த காரணத்தினால் அவைகள் வெளியேற்றப்பட வேண்டும். ஆனால் இஸ்ரவேல் புத்திரர் மூலம் அவருடைய குணாதிசயத்தை வெளிப்படுத்தி, அதன் மூலம் மனிதர்கள் தேவனிடம் ஈர்க்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாக இருந்தது. உலகம் முழுவதும் நற்செய்தி அழைப்பு வழங்கப்பட இருந்தது. [...] கானானிய இராகாப், மோவாபிய ரூத், போன்றவர்கள், சிலை வழிப்பாட்டிலிருந்து உண்மையான தேவனுடைய வழிப்பாட்டிற்கு திரும்பிய அனைவரும், அவரது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடன் தங்களை ஒன்றிணைத்து கொள்ள வேண்டும்.”

எலன் ஜி உவைட் (க்றைஸ்ட் ஆப்ஜக்ட் லெசன்ஸ், பக். 290)